# குறள் உணர்த்தும் உணவு விருந்தோம்பல் முறை

**மு.சுகவாசன்**

**இராணி மேரி கல்லூரி, மயிலாப்பூர், சென்னை – 04 .**

**sugavasan7@gmail.com**

73

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழர்கள் உணவு முறைகளில் விருந்து உபசரிப்பதற்கு தனக்கென தனி மகுடத்தை முத்திரையாய் பதித்தவர்கள். ஒரு மனிதன் அன்றாட இயல்பு வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படைய் அமைவது உணவு உடை இருப்பிடம் உடை மற்றும் இருப்பிடம் இவற்றில் எவை குறைந்தாலும் மனிதன் உயிர் வாழ்வான் ஆனால் உணவின்றி உயிர் வாழ இயலாது என்பதால் உணவு தமிழர்களிடையே மகுடமாக போற்றப்படுகிறது இதனால் தமிழர்களின் விருந்தோம்பல் உணவு முறை சிறப்பினை உணர்த்துவது கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வின் நோக்கம்**

நமது உறவினர்கள், நண்பர்கள் எவ்வித சாதி, மதம், இனம், மொழி என்று பார்க்காமல் பண்டையகாலம் முதல் இன்று தொட்டு வரை மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. நம் வீடு தேடி வருபவர்களை இன்முகத்தோடு வரவேற்று மனமகிழ்ந்து உனவளிப்பதை உலக வாழ்வில் விருந்தோம்பல் சிறக்க வேண்டும் என்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

குறள், மருந்து, விருந்து, உண், முகமலர்ச்சி, உண்டி, செல்விருந்து, நுல்விருந்து

**முன்னுரை**

இந்த விருந்தோம்பல் முறையானது இன்றைய நவநாகரிக காலத்தில் குறைந்து வருகிறது. இந்த விருந்தோம்பல் என்பது தமிழர்களின் தனித்துவமான அடையாளங்களில் ஒன்றாக கருத முடியும். தமிழர் பண்பாடுகளில் ஒன்றான "விருந்தோம்பல் நாம் உண்கின்ற உணவைப் புதிதாக வருபவர்களுக்கு கொடுத்து உபசரிக்கும் பண்பு விருந்தோம்பல் ஆகும்.

**"மருந்தே ஆயினும் விருந்தோடுண்"1**

-கொன்றைவேந்தன்.பா.எண்.70

என்று சொல்லியிருக்கிறார் ஔவையார். உண்பது அருமருந்து என்றாலும்கூட அதை தாம் மட்டும் உண்ணாமல் உற்றார், உறவினர், சுற்றத்தோடு, நண்பர்களோடு உண்ண வேண்டும் என்கிறார் ஔவையார். அதாவது நாம் உண்கின்ற உணவை புதிதாய் வருகின்றவர்களுக்கும் கொடுத்து உபசரிக்கும் பண்பு தமிழர்களுக்குரியதாகும்.

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"[2]**

-குறள்.எண்.81

என வள்ளுவர் கூறுகின்றார். அதாவது இல்லத்தில் இருந்து பொருட்களை பாதுகாத்து வாழ்க்கை நடத்துவது எல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்வதற்கே ஆகும்.

நாம் உண்கின்ற உணவைப் புதிதாக வருபவர்களுக்கு கொடுத்து உபசரிக்கும் பண்பு இத்தகைய சிறப்புமிக்க விருந்தோம்பல் தமிழர் பண்பாடுகளில் ஒன்றாகும். அவ்வாறு செய்யும்போது

தானமும், தர்மமும் தலைகாக்கும். இத்தகைய தமிழர் பண்பாட்டை பிரதிபலிக்கும் என்கிறார் வள்ளுவர்.

பழமொழிகள் ஒரு சமுதாயதில் இருந்துவரும் அனுபவக் குறிப்புகள் ஆகும். **'இட்டு கெட்டவர் யாரும் இல்லை'** என்ற பழமொழிகள் மூலமும் கூறுவார்கள். அந்தளவிற்கு தானமும், தர்மமும் தலைகாக்கும் என்பது மரபு. அதன் வாயிலாகவே ஈகையும், பண்பும் அடுத்தவர்க்கு உணவளிக்கும் உயரிய மாண்பு தமிழர் வரலாற்றில் இலக்கியத்தில் பெரிதும் பேசப்படுகிறது.

சங்க இலக்கியங்கள் அகத்தியம், தொல்காப்பியம், திருக்குறள், திருமந்திரம், என பல நூல்கள் விருந்தோம்பலைப் பற்றி அழகாக எடுத்துக்துறைகின்றன.

இக்கட்டுரையில் பண்டையத் தமிழர்களின் விருந்தோம்பல் பண்பு இவற்றின் பெருமைகள் அவற்றின் இன்றைய நிலைபோன்றவற்றை இந்தக் கட்டுரையில் காணலாம்.

**பண்டையத் தமிழர்களும் விருந்தோம்பலும்**

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"[3]**

-குறள்.எண்.81

என்கிறார் வள்ளுவர். அதாவது எமது வீடு தேடி வருகின்ற விருந்தினர்களை, நண்பர்களை, உறவினர்களை, சுற்றத்தார்களை மகிழ்வோடு இருகரம் கூப்பி வரவேற்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

விருந்தினர்களை உபசரிப்பது பெரும்பாக்கியம் என்கிறார் வள்ளுவர். விருந்தோம்பல் இல்லாதோரை மடைமையுடையோர் என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார். இதனை,

**"உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**
**மடமை மடவார்கள் உண்டு"[4]**

-குறள்.எண்.89

என்கிறார் வள்ளுவர். அந்தளவிற்கு விருந்தோம்பலை தமது பாக்கியமாக கருதியவர்கள் தமிழர்கள். மேலும் சங்க இலக்கியங்களிலும் எட்டுத்தொகை நூல்களான அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களில் விருந்தோம்பலின் சிறப்பு தொடர்பாக அதிகம் பேசப்படுகிறது. தமிழர்களின் விருந்தோம்பல் பழக்க வழக்கத்தோடு பல அறிவியல் விடயங்களும் காணப்படுகின்றன.

நம் வீடுகளுக்கு வரும் விருந்தாளிகளை வாசல் வரை சென்று இன்முகத்துடன் வரவேற்று கைகால்களை கழுவ வைத்து அவர்களை இன்சொல் பேசி அவர்களை நலம் விசாரித்து முதலில் பருக குடிபானங்கள் வழங்குதல் இனிப்புக்களை வழங்குதல்.. பின்பு அவர்களுக்கு உணவு சமைத்தல் விருந்து பரிமாறுதல். வாழையிலையில் முறையாக உணவுகளை வைத்து ஒரு குவளையில் நீரும் திசைபார்த்து அமர்ந்து உணவினை உண்டு முடித்ததும் அவர்கள் உண்டு முடித்த இலையினை உபசரிப்பவர்களே எடுப்பதும் அவர்கள் கை கழுவ நீரையும் ஊற்றி கழுவ வைப்பார்கள். பின்பு அவர்களுடன் அன்பாக உரையாடி வாசல் வரை சென்று வழியனுப்பி வைப்பார்கள். அந்த அளவிற்கு விருந்தாளிகளை அன்பாக கவனித்து வழியனுப்புவது தமிழர்கள் பண்பாடாகும். இது தமிழர் விருந்தோம்பல் பண்பாட்டின் ஒரு பகுதியாகும். இன்னும் பல விடயங்கள் விருந்தோம்பலின் மாண்பையும், பெருமையையும் பறைச்சாற்றுகின்றன.

**மறக்கப்பட்ட விருந்தோம்பல் பண்பு**

இத்தனை பெருமைகளுடைய தமிழர் பாரம்பரியம் விருந்தோம்பல் இன்று மிகவும் அருகி போய்விட்டது. அடுத்தவர்களை உபசரிக்கும் பண்பு குறைந்தும் விட்டது. இன்றைய தொழில்நுட்ப உலகம் சமூக வலைத்தளங்கள் உறவுகளுக்கிடையான நெருக்கத்தையும் குறைத்து ஒற்றுமையில்லாத போலியான வாழ்க்கையை ஒவ்வொரு மனிதர்களும் வாழ்ந்து கொண்டிருப்பது வெளிப்படையான உண்மை.

**“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்”[5]**

-குறள்.எண்.322

என்கிறது திருக்குறள் என்று உலகுக்குச் சொன்ன எம் இனம் இன்று நெறி தவறி போவது கண்டு மனம் வேதனைக் கொள்கிறது.

**விருந்தோம்பல் எனும் உயர் மாண்பு**

உலகத்தில் வேறு எந்த இடத்திலும் பார்க்க முடியாத வந்தோரை வரவேற்று உபசரித்து அனுப்பும் வழக்கம் தமிழர்களுக்குரியது. இது அடுத்தவர்களையும் அன்போடு உபசரிக்கும் சிறந்த பழக்கமாகும்.

பசியோடும் களைப்போடும் வருபவர்களுக்கு உணவளிப்பது உயர்ந்த புண்ணியம் என்கிறது மதங்கள். மண்ணில் உள்ள உயிர்களுக்கெல்லாம் உணவும், உடையும், வீடும் அழிப்பது தான் உயர்ந்த அறம் என்று போதிக்கிறது “மணிமேகலை”. வறியவர்கள், முதியவர்கள், பிறவிகுறைபாடு உடையவர்கள், அநாதையாக வீதியில் நிற்பவர்கள், நோயுற்றவர்கள் போன்றோருக்கு உணவழித்தல் ஆக சிறந்த அறம் என்கிறது மணிமேகலை.

**“உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்”[6]**

-புறம்.பா.எண்.18

புறநானூற்றுப் பாடல் ஒன்று தமிழகத்தின் இன்றைய தேவையை வலியுறுத்துவதாக விளங்குகின்றது என்றால் மிகையல்ல. இப்பண்பை நாமும் உணர்ந்து நடப்பது சாலச் சிறந்தது.

**விருந்தினர்கள்**

தமிழர் பண்பாட்டின் சிறப்பம்சமாக விருந்தோம்பல் பண்பாடு என்பது யார் யாரை உபசரிக்க தோன்றியது என்பதனை இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. தொல்காப்பியத்தில் விருந்தினர்கள் என்போர் யார் எனச் சொல்லப்படுகின்றது.

விருந்து என்னும் சொல்லிற்கு புதுமை என்று பொருள். விருந்தினர் என்பது புதிதாக வந்து இருக்கக்கூடியவர்கள். அவர் தமது உற்றார்,உறவினர்கள், நண்பர்கள், விருந்தினராக மாட்டார்கள். எமக்கு யார் என்று தெரியாத புதியவர்கள் தான் விருந்தினர்கள் என்று இலக்கியங்கள் நமக்குக் எடுத்துரைக்கின்றன.

**தமிழ் இலக்கியங்களில் விருந்தோம்பல்**

சங்க இலக்கியங்கள் தொல்காப்பியம், திருமந்திரம், திருக்குறள் எனப் பல நூல்களில் விருந்தோம்பலைப் பற்றி அழகாக எடுத்துரைக்கின்றன. தொல்காப்பியத்தில் விருந்தோம்பலைப் பற்றி அகத்தியர் பின்வருமாறு கூறுகின்றார்.

விருந்தே புதுமை அதாவது விருந்தினர் என்பது வேறு உறவினர்கள் என்பது வேறு இருவரும் ஒன்று அல்ல. முன்பின் தெரியாத ஒருவரை வீட்டுக்கழைத்து உணவளித்தல் விருந்தோம்பல் ஆகும் என்கின்றார்.

திருவள்ளுவர் விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தில் விருந்தோம்பல் பற்றிப் பத்து குறள்களில் கூறியுள்ளார்.

**“வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று”**[7]

-குறள்.எண்.82

அதாவது தன் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை நாள்தோறும் போற்றுபவர் வாழ்க்கைத் துன்பத்தால் அழிவதில்லை என்பதாகும்.

சங்க இலக்கியப் பாடல்களில் பத்து பாட்டுக்களில் ஒன்றான பொருணராற்றுப்படையில் வீட்டிற்கு விருந்தினர்கள் வந்தால் அவர்களை உபசரித்து மறுபடியும் அவர்கள் திருப்பிச் செல்லும்போது வீட்டிற்கு வெளியே வந்து அவர்களோடு 7 அடி நடந்து வழியனுப்பி வைக்க வேண்டும் என்று கூறுகின்றது.

இதேபோல் எட்டுத்தொகையில் ஒன்றான “புறநானூறு” வறுமை இருப்பினும் வந்தவர்களுக்கு இல்லை எனக் கூறாது உபசரிக்க வேண்டுமெனக் குறிப்பிடுகின்றது.

**விருந்தோம்பலும் அதிலுள்ள அறிவியலும்**

தமிழர்களின் ஒவ்வொரு கலாச்சாரப் பின்னணியிலும் ஓர் அறிவியலுள்ளது. வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு வாயில்களில் நீர் வைக்கப்பட்டிருக்கும். நீரில் விருந்தினர்கள் கை, கால்களைக் கழுவிய பின்னர் உள்ளே வரவைப்பர்.

இதன் பின்னுள்ள அறிவியல் நமக்கு உணர்த்துவது என்னவெனில் பெரும்பாலும் கை, கால்களிலுள்ள கிருமிகளால் நோய்த்தொற்று ஏற்படும். சுத்தப்படுத்துவது மூலம் நோய்த்தொற்று தடுக்கப்படுகின்றது. வாழை இலையில் உணவு பரிமாறும் வழக்கத்தைத் தமிழர்கள் பின்பற்றினர். வாழை இலையின் குறுகிய பாகம் அமர்ந்து இருப்பவர்களின் இடதுபுறமும் தடிமனான பகுதி வலதுபுறமாக வைக்கப்படும். இதற்கான காரணம் உணவின் பயன்பாட்டைப் பொறுத்தே வைக்கப்படுகின்றது. சாதம் அதற்கான கூட்டு வகைகள் போன்றன அடிக்கடி எடுத்து உண்ணக்கூடிய உணவுகள் அனைத்தும் இலையின் தடிமனான பகுதியில் இருக்கும். அடிக்கடி பயன்படுத்தாத ஊறுகாய், உப்பு போன்றவை இடதுபுறமாக இருக்கும். இதனால்தான் இலையின் வைப்பு இச்சாராம்சத்திலுள்ளது.

**முடிவுரை**

வழிப்போக்கர்களை உபசரிக்கும் முன்னோர்களின் விருந்தோம்பல் பண்பினை முழுமையாக பின்பற்ற முடியவில்லை என்றாலும் பசியால் வருவோருக்கு அவர்களைப் புறக்கணிக்காமல் இன்முகத்துடன் வரவேற்று உணவளிக்க வேண்டும்.

**“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானதவர்க்கே”**[8]

- குறள்.எண்.86

என்கிறது திருக்குறள். அதாவது வந்த விருந்தினர்களை அன்பாகக் கவனித்து அனுப்பி வைத்துவிட்டு வருகின்ற விருந்தினர்களுக்காக வாசலில் காத்திருந்தவர்கள் நம் முன்னோர்கள். இத்தனை பெருமைகள் உடைய இனத்தில் பிறந்த நாம் பெருமைக்குரியவர்கள் எம் பண்பாடு, எம் கலாச்சாரம், எம் பழக்கவழக்கங்கள் என்றைக்கும் மங்காதவை இவற்றை நாமும் பின்பற்றி வாழ்வதே சிறப்பானதாகும். இன்று வரையில் நமது பண்பாட்டில் விருந்தோம்பல் பண்பு நிலைத்து நிற்க, இந்த பண்பாட்டுத் தொடர்ச்சியேக் காரணமாகும். இந்த உயரியப் பண்பாட்டை நாமும் அடுத்தத் தலைமுறைக்கு எடுத்துச் செல்வோம்.

**பார்வை நூல்கள்**


- டாக்டர்.எஸ்ஆர்.கே. - திருக்குறள் அய்வுரை
- பரிமேலழகர் - திருக்குறள் உரை
- புலியூர்க்கேசிகன் - புறநானூறு தெளிவுரை
- கவிஞர்.பத்மதேவன் - நீதி நூல் களஞ்சியம்